6. வரவு–செலவுத் திட்டம், 2013–2014, பொது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2013–2014 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம். திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"குடிதழிஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழிஇ நிற்கும் உலகு"

குடிமக்களை அணைத்து, நல்லாட்சி நடத்தும் தலைவனின் அடியைப் பின்பற்றி நடக்கும் இந்த உலகம் என்ற தெய்வப்புலவன் வள்ளுவனின் குறளுக்கு இலக்கணமாய், அன்னை தமிழகத்தில் புனித ஆட்சி நடத்தி வருகின்ற வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் புரட்சிப் பூவாய் மலர்ந்து, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த அவையிலே தாக்கல் செய்யப்பட்டு இருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையிலே என்ன கொடுப்பார், ஏது கொடுப்பார் என்று இவர்கள் எண்ணும் முன்பே, பொன்னும், பொருளும் கொடுத்திருக்கின்றார், உணவும், உடையும் கொடுத்திருக்கின்றார், கல்வியும் வேலையும் கொடுத்திருக்கின்றார், நிதியும், வீடும் கொடுத்திருக்கின்றார். (குறுக்கீடு)

5. அரசினர் தீர்மானம்–தொடர்ச்சி

தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள்மீதான உரிமை மீறல் பிரச்சினையில் அவை உரிமைக் குழு அளித்த பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளுதல்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாகரிகமாக நடந்துகொள்ளவேண்டும். வெளியேறிய உறுப்பினர்கள் வெளியே செல்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர்

பேசிக்கொண்டு இருக்கின்றபோது, திரும்பவும் வந்து விரலைக் காட்டி, அதிகாரம் செலுத்தி விட்டுச் சென்றால் என்ன அர்த்தம்? சட்டசபையில் எவ்வாறு நாகரிகமாக நடந்துகொள்ளவேண்டுமென்று அவர்களுக்கு அறிவுரை கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் இவ்வாறு ஒழுங்கீனமாக நடக்கக்கூடாது. இதுபோல் ஒழுங்கீனமாக நடக்கும் உறுப்பினர்கள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டி வரும். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள், அவர்கள் கட்சியில் புதியதாகக் கூட்டு சேர்கின்றார்கள் என்றால், சேர்ந்துவிட்டுப் போகட்டும். நம்மிடம் எதற்காக இவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்?*

6. வரவு—செலவுத் திட்டம், 2013—2014, பொது விவாதம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், நீங்கள் பேசுங்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும், எண்ணிலடங்காத வளர்ச்சித் திட்டங்களையும், தொலைநோக்குத் திட்டங்களையும், மக்கள் நலன் காக்கும் திட்டங்களையும் வாரி, வாரிக் கொடுத்து இருக்கின்றார்கள். இத்தனையும் போதாது, போதாது என்றால், இன்னும் கொடுப்பார், இருப்பதையெல்லாம் கொடுப்பார், கொடுத்துக் கொண்டே இருப்பார் அன்னை தமிழக மக்களுக்காக. (மேசையைத் தட்டும் ஒலி) தன்னையே கொடுத்த தியாக சரித்திரம் படைத்திருக்கின்ற தெய்வத் தலைவி, மாண்புமிகு அம்மா அவர்கள். சாதிக்கு ஒரு நீதி என்று இருக்கின்ற தலைவர்களுக்கு மத்தியிலே, சகலருக்கும் ஒரே நீதி என்ற புதிய சகாப்தத்தை உருவாக்கி, சமூக நீதி காத்திட்ட வீரத் தாயே!*